1995 மே 2]

513—

உதகமண்டலம் காது கேளாதோர் பள்ளிக்குக் கட்டிடம் கட்டுதல்

***34219—**திரு. எச். எம். ராஜு : மாண்புமிகு சமூகநலம் மற்றும் கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உதகமண்டலம் காது கேளாதோர் பள்ளிக்குக் கூடுதல் கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாவை ?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூகநலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. எச். எம். ராஜு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உதகமண்டலத்தில் காது கேளாதோர் பள்ளியில் முன்பு ஐந்தாம் வகுப்புவரை மட்டும்தான் இருந்தது. இப்போது உயர் வகுப்புகளுக்கு உத்தரவாகிவிட்டபடியால் அது 10 ஆம் வகுப்பு வரை. செல்வதால், அங்கே படிக்கும் காது கேளாத மாணவர்களுக்கு வகுப்பறைகள் போதவில்லை. ஐந்தாம் வகுப்பு வரை நடந்த இடத்திலேயேதான் அவர்கள் இருந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே காது கேளாத மாணவர்களுக்கும், வாய் பேச முடியாத இந்த ஜீவன்களுக்கும் அரசு உடனடியாக 5 அறைகளை – அங்கே இடம் இருப்பதால் – கட்டித்தர, 1995-96-ல் 2 அறைகளும் 1996-97-ல் 3 அறைகளும் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காது கேளாதோர் பள்ளிக்கு இப்போது உயர் வகுப்புகளைக் கொடுத்து மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். உயர் வகுப்புகள் கொடுத்தபோது, அந்த உயர் வகுப்புகளுக்கான கட்டிடங்கள் கட்டித் தருவதற்காகவும் உத்தரவிட்டிருக்கிறார்கள். ஆகவே 3 அறைகள், 2 அறைகள் என்பதல்ல. அங்கே எவ்வளவு குழந்தைகள் இருக்கிறார்களோ,

அவர்கள் வசதிக்கேற்ப, இன்னும் அதிகமாகத் தேவைப்பட்டாலும் கட்டிக் கொடுக்கப்படும். அதற்காக இப்போது ரூ. 4.41 இலட்சம் மதிப்பீட்டில் கட்ட கருத்துரு அரசின் பரிசீலனைக்குக் கொண்டுவரப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எச்.எம். ராஜு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அறைகள் கட்டுவதற்காக உதகை மாநகரத்தில் பல தொண்டு நிறுவனங்களும், தனியார்களும்கூட பணம் கொடுத்து, நல்ல வகையிலே அறைகளைக் கட்டலாம் என்ற எண்ணத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சரவர்கள் அதை ஏற்பார்களேயானால், அரசாங்கமும் அவர்களும் சேர்ந்து நல்லமுறையில் காது கேளாதோர், பேச்சுத் திறன் இல்லாத குழந்தைகளுக்கு சிறப்பான கட்டிடங்களைத் கட்டிக் கொடுக்க முடியும். அதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-40

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது 4.41 லட்சம் ரூபாய் அரசாங்கம் ஒதுக்கியிருக்கிறது. அப்படிப்பட்ட தொண்டு நிறுவனங்கள் முன்வந்து எங்களிடம் பேச்சுவார்த்தை நடத்தி, அதில் எந்த பாதகமும் அந்தப் பள்ளிகளுக்கும் குழந்தைகளுக்கும் ஏற்படாத வகையில் இருக்குமானால் அதைப்பற்றி அரசாங்கம் பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் ச. ஆரோக்கியசாமி.

டாக்டர் ச. ஆரோக்கியசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள், காது கேளாதோர் பள்ளிகளையெல்லாம் உயர்நிலைப் பள்ளிகளாக மாற்றி இருக்கிறார்கள். அதற்கு எனது இதயங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். காது கேளாதோர் என்றால், நேரிலே பார்ப்பதற்கு உடல் ஊனமுள்ளவர்கள் மாதிரி தெரியமாட்டார்கள். அந்தப் பெண்குழந்தைகளையும், பையன்களையும் நேரிலே பார்க்கிறபோது நமக்கு இரக்கம் ஏற்படாது. ஆனால், அவர்கள் பேச முடியாமல் தவிக்கும்போதுதான் நமக்கு இதயமெல்லாம் நெக்குருகிப் போகின்ற அளவுக்கு ஒரு இரக்கத்தை அவர்கள் மேல் ஏற்படுத்தும். ஆகவே, அங்கே உயர்நிலைப் பள்ளிக்கூடங்களாக ஆக்கியதற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அந்த உயர்நிலைப் பள்ளிகளுக்கெல்லாம் பணியிடங்களை நிரப்புவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்தெந்த உயர்நிலைப் பள்ளிகளுக்கு ஆசிரியர் பணியிடங்கள் இல்லையோ, அதை அரசு பரிசீலித்து நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 514. டாக்டர் மு. சீனியம்மாள், மாண்புமிகு சமூகநலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்.

514—

கோவை மாவட்டத்தில் நெசவாளர் கூட்டுறவு சங்கம் ஏற்படுத்துதல்

***35664**—*டாக்டர் மு. சீனியம்மாள் :*

மாண்புமிகு சமூகநலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அவினாசி தொகுதி, அவினாசி ஒன்றியம், சாவகாட்டுப் பாளையம், பெரியார், கோவை ஆகிய மாவட்டங்களையும் சேர்ந்த ஊராதலால், பெரியார் மாவட்டப் பகுதியில் நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் செயல்படுவது போல், கோவை மாவட்டப் பகுதியிலும் இச்சங்கம் ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ஏற்படுத்தப்படும் ?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூகநலம் மற்றும் கைத்தறித்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) அரசு ஆவன செய்துள்ளது.

டாக்டர் மு. சீனியம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவினாசி தொகுதி, அவினாசி ஒன்றியம், சாவகாட்டுபாளையம் என்பது, பெரியார் மாவட்டத்தையும் கோவை மாவட்டத்தையும் இணைக்கின்ற ஒரு கிராமம். அங்கு சுமார் 1,000 நெசவாளர்கள் வாழ்கிறார்கள். அங்கு நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் அமைத்து அது செயல்படாமல் இருந்ததை, மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர், அண்ணாவின் பெயரிலே ஒரு கூட்டுறவுச் சங்கத்தை அமைத்துத் தந்ததற்கு நான் அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியை டாக்டர் புரட்சித் தலைவியின் பொற்பாதங்களுக்குச் சமர்ப்பித்துத் தெரிவித்துக் கொள்கிறேன். அதனால் அங்கே இருக்கிற நெசவாளர்கள் குடும்பங்களுக்கு